# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2069/35 - 2018 මැයි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.03

*2069/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### புகையிரதப் பொது முகாமையாளர் காரியாலயம்

இலங்கைப் புகையிரதப் பணியாளர் நலன்புரிச் சங்கம்

**யாப்பு சீர்திருத்தம்**

இலங்கைப் புகையிரதப் பணியாளர் நலன்புரிச் சங்கம் தற்போதைய யாப்பினுள் (1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 03 ஆம் இலக்க, கட்டளை விதிப்படி) உள்வாங்கப்படுவதற்காக முன்மொழியப்பட்ட யாப்பு சீர்திருத்தமானது, 27 ஆந் திகதி ஆவணி (ஓகத்து) மாதம் 2017 இல், ரயில்வே தலைமையகத்தின் இலக்கிய மற்றும் சமூக கூடத்தில் நடைபெற்ற 45 ஆவது பொதுக் குழுவில் வழிமொழியப்பட்டது. இக்கூட்டமானது இலங்கைப் புகையிரதப் பணிப்பாளர் நலன்புரிச் சங்கத்தின் அவைத்தலைவர் திரு. திலிப் பிரியலத் அவர்களின் தலைமையின் கீழ், புகையிரதப் பொது முகாமையாளர் மற்றும் உதவி நிர்வாக இயக்குநர் மதிப்புக்குரிய திரு. எம். என். வீரசிங்காவின் பிரதிநிதித்துவத்துடன், மின் பொறியியலாளர் திரு. ஈ. எம். தர்மசிறி அவர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது.

**தற்போதைய யாப்பு (03) (06) அ**

ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக மாதாந்தம் 500 ரூபா செலுத்த வேண்டும். கணக்கில் மிச்சம் இருக்கும் தொகைக்கு வருடாந்த வட்டி 10% கணக்கிடப்பட வேண்டும். அந்த வட்டித் தொகை வேறு ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். அது ஓய்வுபெறும்போது ஓய்வூதிய பணிக்கொடையுடன் வழங்கப்பட வேண்டும்.

**திருத்தப்பட்ட யாப்பு (03) (06) அ**

ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக மாதாந்தம் 500 ரூபா செலுத்த வேண்டும். வருடாந்தம் வங்கிக் கணக்கில் சேமிக்கும் பணத்திற்கு வருடாந்த வட்டி 10□ கணக்கிடப்பட வேண்டும். வருடத்தின் இறுதியில் அந்த வட்டித் தொகை வேறு ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். அது ஓய்வுபெறும்போது ஓய்வூதியப் பணிகொடையுடன் வழங்கப்பட வேண்டும்.

**தற்போதைய யாப்பு (04) 02**

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமானது ஒவ்வொரு வருடமும் பங்குனி (மாச்சு) மாதம் 31 ஆந் திகதிக்கிடையில் கொழும்பு மாவட்டத்தில் எந்தவொரு இடத்திலாவது நடாத்தப்பட வேண்டும். வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பரிந்துரைகளை ஒவ்வொரு உறுப்பினரும் எழுத்து மூலம் மூன்று மாதத்திற்கு முன் செயலாளர்/பொருளாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். உதாரணமாக, அடுத்த வருடம் பங்குனி (மாச்சு) மாதம் 31 ஆந் திகதிக்கு முன் நடாத்தப்படவேண்டிய வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான பரிந்துரைகளை இவ்வருடத்தின் மார்கழி (திசெம்பர்) 31 ஆந் திகதிக்கிடையில் செயலாளரிடம் சமர்ப்பிக்க உறுப்பினர் ஆவண செய்தல் வேண்டும். இவ் எல்லா பரிந்துரைகளும் வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கைப் புத்தகத்தில் பதியப்பட வேண்டும். யாப்பிற்கு எதிரான பரிந்துரைகளை நிராகரிக்கும் அதிகாரம் செயற்குழுவிற்கு உண்டு.


1A - G 27560 — 08 (2018/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 02***

*சங்கத்தின் பொதுக்கூட்டமானது இரண்டு வருடத்தின் முடிவில் பங்குனி (மாச்சு) மாதம் 31 ஆந் திகதிக்கிடையில் கொழும்பு மாவட்டத்தில் எந்தவொரு இடத்திலாவது நடாத்தப்பட வேண்டும். பொதுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பரிந்துரைகளை ஒவ்வொரு உறுப்பினரும் எழுத்துமூலம் மூன்று மாதத்திற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். உதாரணமாக, அடுத்த வருடம் பங்குனி (மாச்சு) மாதம் 31 ஆந் திகதிக்கு முன் நடாத்தப்படவேண்டிய பொதுக்கூட்டத்திற்கான பரிந்துரைகளை இவ்வருடத்தின் மார்கழி (திசெம்பர்) மாதம் 31 ஆந் திகதிக்கிடையில் செயலாளரிடம் சமர்ப்பிக்க உறுப்பினர் ஆவண செய்தல் வேண்டும். இவ் எல்லா பரிந்துரைகளும் வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கைப் புத்தகத்தில் பதியப்பட வேண்டும். யாப்பிற்கு எதிரான பரிந்துரைகளை நிராகரிக்கும் அதிகாரம் செயற்குழுவிற்கு உண்டு.*

***தற்போதைய யாப்பு (04) 03***

*கடந்த வருட வருடாந்தப் பொது கூட்டத்தின் அறிக்கை, கடந்த வருடத்தின் புரட்டாசி (செத்தெம்பர்) மாதம் 30 ஆந் திகதி வரையிலான தற்போதைய சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புக்கள் அடங்கிய இருப்புநிலை ஏடு, கடந்த வருடத்தின் பாதீட்டின் (செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவுறும்) கணக்கு அறிக்கை, கணக்காளர் மேற்பார்வை அறிக்கை, சங்கத்தின் கட்டுப்பாட்டு அறிக்கை ஆகியன அடங்கிய ஆண்டறிக்கை வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 03***

*கடந்த வருட பொதுக் கூட்டத்தின் அறிக்கை, கடந்த இரு வருடத்தின் புரட்டாசி (செத்தெம்பர்) மாதம் 30 ஆந் திகதி வரையிலான தற்போதைய சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புக்கள் அடங்கிய இருப்பு நிலை ஏடு, கடந்த இரண்டு வருடங்களின் பாதீட்டின் (செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவுறும்) கணக்கு அறிக்கை, கணக்காளர் மேற்பார்வை அறிக்கை, சங்கத்தின் கட்டுப்பாட்டு அறிக்கை ஆகியன அடங்கிய இரண்டு ஆண்டுகளுக்கான அறிக்கை பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***தற்போதைய யாப்பு (04) 04***

*செயலாளர்/பொருளாளர் வருடாந்தப் பொதுக் கூட்டதிற்கு 14 நாட்களுக்கு முன்னதாக ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும்; அத்துடன் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பத்திரிகைகளில் கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும். நிகழ்ச்சி நிரலுடன் அச்சிடப்பட்ட அறிக்கை கூட்டம் நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக உறுப்பினரிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உறுப்பினருக்கு நிகழ்ச்சி நிரலுடன் அச்சிடப்பட்ட அறிக்கை கிடைக்கப்பெறவில்லை எனின் செயலாளர்/ பொருளாளரிடம் கோரிக்கை வைத்து பெற்றுக்கொள்ளலாம்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 04***

*செயலாளர் பொதுக் கூட்டத்திற்கு 14 நாட்களுக்கு முன்னதாக ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும்; அத்துடன் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பத்திரிகைகளில் கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும். நிகழ்ச்சி நிரலுடன் அச்சிடப்பட்ட அறிக்கை கூட்டம் நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக உறுப்பினரிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உறுப்பினருக்கு நிகழ்ச்சி நிரலுடன் அச்சிடப்பட்ட அறிக்கை கிடைக்கப்பெறவில்லை எனின், செயலாளரிடம் கோரிக்கை வைத்து பெற்றுக்கொள்ளலாம்.*

***தற்போதைய யாப்பு (04) 05***

*வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான நிறைவெண் எழுபத்தைந்து ஆகும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 05***

*பொதுக்கூட்டத்திற்கான நிறைவெண் எழுபத்தைந்து ஆகும்.*

***தற்போதைய யாப்பு (04) 06***

*நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத எந்த விடயமும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் விவாதிக்கப்படவோ நிறைவேற்றப்படவோ கூடாது.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 06***

*நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத எந்த விடயமும் பொதுக்கூட்டத்தில் விவாதிக்கப்படவோ நிறைவேற்றப்படவோ கூடாது.*

***தற்போதைய யாப்பு (04) 07***

*வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் அறிக்கையின் நகல், சான்றுபடுத்திய கணக்காளர் மேற்பார்வை அறிக்கை, இருப்புநிலை ஏட்டுடன் கூடிய நிதி அறிக்கை ஆகியன கூட்டம் முடிவுற்று மூன்று மாதத்திற்குள்ளாக புகையிரதப் பொது முகாமையாளர் மற்றும் நிரந்தர செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 07***

*பொதுக் கூட்டத்தின் அறிக்கையின் நகல், சான்றுபடுத்திய கணக்காளர் மேற்பார்வை அறிக்கை, இருப்புநிலை ஏட்டுடன் கூடிய நிதி அறிக்கை ஆகியன கூட்டம் முடிவுற்று மூன்று மாதத்திற்குள்ளாக புகையிரதப் பொது முகாமையாளர் மற்றும் நிரந்தர செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***தற்போதைய யாப்பு (04) 08***

*ஒரு வருடாந்த பொதுக்கூட்டத்தின் அறிக்கையானது அடுத்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (04) 08***

*ஒரு பொதுக்கூட்டத்தின் அறிக்கையானது அடுத்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.*

***தற்போதைய யாப்பு (10) செயலாளர்/பொருளாளரின் பொறுப்புகள்***

1. *செயற்குழுவின் செயலாளர் பொருளாளராக கடமையாற்றுவதோடு அனைத்துக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும்.*
2. *செயற்குழுவின் சாதாரண அல்லது விசேட விதிமுறைகளுக்கிணங்க சங்கத்தின் உறுப்பினர்களான ஊழியர்களின் ஒழுக்காற்று விதிமுறைகளை பேணுதல்.*
3. *சங்கத்தின் நிர்வாகத்தினை பொறுப்பேற்க வேண்டும்.*
4. *வருடாந்தம் சங்கத்தின் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.*
5. *சங்கத்தின் பணம் மற்றும் நிதி சம்பந்தமான கணக்குகளை பராமரித்தல் வேண்டும்.*
6. *யாப்பிற்கிணங்க செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள், கோரிக்கைகள், கடன் முற்பணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.*
7. *ஒவ்வொரு மாதமும் வரவு செலவுக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்து செயற்குழுக் கூட்டத்தின்போது சமர்ப்பிக்க வேண்டும்.*
8. *வருடம் தோறும் சங்கத்தின் கணக்கு வழக்கு சம்பந்தமான பாதீட்டினைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (10) 01 செயலாளரின் கடமை***

1. *செயற்குழுவின் செயலாளராக கடமையாற்றுவதோடு அனைத்துக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும்.*
2. *செயற்குழுவின் சாதாரண அல்லது விசேட விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க சங்கத்தின் உறுப்பினர்களான ஊழியர்களின் ஒழுக்காற்று விதிமுறைகளை பேணுதல்.*
3. *துணைவிதிகள் மற்றும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக மற்றும் செயற்குழுவின் தீர்மானங்கள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைவாக சங்க நிர்வாகத்தினை பொறுப்பேற்க வேண்டும்.*
4. *ஒவ்வொரு வருடமும் சங்கத்தின் அறிக்கைகளை தயாரித்து பொதுக்கூட்டத்தின் போது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (10) 02 கணக்காளரின் கடமை***

1. சங்கத்தின் அனைத்துப் பணம் மற்றும் நிதி சம்பந்தமான கணக்குகளைப் பராமரித்தல் வேண்டும்.

2. சங்கத்தின் யாப்பிற்கிணங்க செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள், கோரிக்கைகள், கடன் முற்பணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

3. ஒவ்வொரு மாதமும் வரவு, செலவுக் கணக்கு அறிக்கைகளை தயாரித்து செயற்குழுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

4. வருடம் தோறும் சங்கத்தின் கணக்கு வழக்கு சம்பந்தமான பாதீட்டினைத் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

***தற்போதைய யாப்பு (17) 02***

மரண நிதியினை கோரும்போது இறப்புச் சான்றிதழ், இது தொடர்பான வேறு ஆவணங்கள், ஆட்சிக் குழுமத்தினால் கோரப்படும் வேறு ஆவணங்கள் என்பன உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இறந்த உறுப்பினரின் சட்டரீதியான வாரிசு ஒருவர் இறப்பு நிகழ்ந்தவுடன் மரண நிதியினைக் கோருவாராயின் மூன்று செயற்குழு உறுப்பினரின் அனுமதியுடன் 1/3 நிதி உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

***திருத்தப்பட்ட யாப்பு (17) 02***

மரண நிதியினை கோரும்போது இறப்புச் சான்றிதழ், இது தொடர்பான வேறு ஆவணங்கள், ஆட்சிக் குழுமத்தினால் கோரப்படும் வேறு ஆவணங்கள் என்பன உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இறந்த உறுப்பினரின் அல்லது அவரைச் சார்ந்த ஒருவரின் மரணத்தின் போது உறுப்பினரின் சட்டரீதியான வாரிசு ஒருவர், இறப்பு நிகழ்ந்தவுடன் மரண நிதியினை கோருவாராயின் மூன்று நிர்வாக குழு உறுப்பினரின் அனுமதியுடன் 1/2 நிதி உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

***தற்போதைய யாப்பு (17) 04***

உறுப்பினருக்கு மரண நிதியாக 40,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் கணவன்/மனைவியின் மரணத்தின் போது 30,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினர் ஒருவரின் தாய்/தந்தை மற்றும் உறுப்பினரது கணவன்/மனைவியின் தாய்/தந்தையின் மரணத்தின் போது, 25,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் திருமணமாகாத பிள்ளையின் மரணத்தின் போது 25,000 ரூபா வழங்கப்படும். எந்த ஒரு உறுப்பினரும் தனது சேவைக்காலத்தில் மொத்தம் மூன்று முறை மட்டுமே மரண நிதியை பெற முடியும். எந்த ஒரு உறுப்பினராவது ஓய்வுபெறும் வரையில் மரண நிதியை பெற்றிராவிட்டால் அவர் ஓய்வுபெறும் போது அவரது வைப்புத் தொகையுடன் அவருக்கு உரித்தான முழு மரண நிதியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். யாராவது 45- 50 வயதிற்கிடையில் உறுப்புரிமை பெற்றால் அவரின் மரணத்தின் போது மரண நிதியாக 30,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் கணவன்/மனைவியின் மரணத்தின் போது 20,000 ரூபா வழங்கப்படும். அவரில் தங்கிவாழ்பவரின் மரணத்தின் போது 15,000 ரூபா வழங்கப்படும்.

***திருத்தப்பட்ட யாப்பு (17) 04***

உறுப்பினருக்கு மரண நிதியாக 50,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் கணவன்/மனைவியின் மரணத்தின் போது 30,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினர் ஒருவரின் தாய்/தந்தை மற்றும் உறுப்பினரது கணவன்/மனைவியின் தாய்/தந்தையின் மரணத்தின் போது 25,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் திருமணமாகாத பிள்ளையின் மரணத்தின் போது 25,000 ரூபா வழங்கப்படும். ஒருவர் உறுப்பினராக இருக்கும் வரையில் தனது சேவைக்காலத்தில் எந்தவித அதிகபட்ச கட்டுப்பாடுகளுமின்றி எத்தனை முறை வேண்டுமனாலும் மரண நிதியை பெற முடியும். எந்த ஒரு உறுப்பினராவது ஓய்வுபெறும் வரையில் மரண நிதியை பெறறிராவிட்டால் அவர் ஓய்வுபெறும்போது அவரது வைப்புத்தொகையுடன் அவருக்கு உரித்தான மரண நிதியையும் சேர்த்து கொடுக்க வேண்டும். அத்துடன் அவருக்கு உரித்தான அதிகபட்ச மரண நிதியைவிட குறைவான தொகையை தான் உறுப்பினராக இருக்கும் காலகட்டத்தில் தன்னைச் சார்ந்து வாழ்வோரின் மரணத்திற்காக பெற்றுக்கொள்ளலாம். உறுப்பினர் ஓய்வுபெறும்பொழுது மரண நிதியின் அதிகபட்ச தொகை வரையிலான மிகுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம். யாராவது 45 - 50 வயதிற்கிடையில் உறுப்புரிமை பெற்றால் அவரின் மரணத்தின் போது மரண நிதியாக 40,000 ரூபா வழங்கப்படும். உறுப்பினரின் கணவன்/மனைவியின் மரணத்தின் போது 20,000 ரூபா வழங்கப்படும். அவரில் தங்கிவாழ்பவரின் மரணத்தின் போது 15,000 ரூபா வழங்கப்படும்.

***தற்போதைய யாப்பு (23) கொடுப்பனவு 05***

இயக்கக் குழுவிலுள்ள ஒவ்வொரு நிறைவேற்று உறுப்பினருக்கும் கூட்டங்களுக்கு வருகை தந்தால் நாள் ஒன்றுக்கு 200 ரூபா வழங்கப்பட வேண்டும்.

***திருத்தப்பட்ட யாப்பு (23) கொடுப்பனவு 05***

*இயக்கக் குழுவிலுள்ள ஒவ்வொரு நிறைவேற்று உறுப்பினருக்கும் கூட்டங்களுக்கு வருகை தந்தால் நாள் ஒன்றுக்கு 500 ரூபா வழங்கப்பட வேண்டும்.*

***தற்போதைய யாப்பு (23) கொடுப்பனவு 06***

*இயக்கக் குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்தால் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் நாள் ஒன்றுக்கு 200 ரூபாப்படி வழங்கப்பட வேண்டும்.*

***திருத்தப்பட்ட யாப்பு (23) கொடுப்பனவு 06***

*இயக்கக் குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்தால் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் நாள் ஒன்றுக்கு 500 ரூபாப்படி வழங்கப்பட வேண்டும்.*

எஸ். எம். அபேவிக்கிரம,
புகையிரதப் பொது முகாமையாளர்.

*2018, ஏப்பிறல் 28.*

*05-499*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*